## விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையி - 2013

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 38 ஆம் இலக்க விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை அதிகாரச்சட்டத்தின் 13(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதிஅதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 46,185,718 தொகையான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றமையால் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) இருப்புக்களை பெறுமதி மதிப்பிடும் போது சரியான கிரயத்தை இடாததன் காரணமாக மருந்து இருப்புக்களின் பெறுமதி ரூபா 178,837 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முன்னைய ஆண்டு செம்மையாக்களின் பெறுமதி ரூபா 1,931,745 தொகையாக இருந்த போதிலும், அப்பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 799,980 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் முன்னைய ஆண்டின் சீராக்கங்களின் பெறுமதி ரூபா 1,131,765 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1999 இன் 38 ஆம் இலக்க விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு | வைத்தியசாலையின் நாளாந்த அலுவல்களை நிர்வகிப்பதற்காக சபையினால் முகாமைத்துவ குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அத்தேவைப்பாடு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. |

(ஆ) 2008 ஆம் ஆண்டின் சுகாதார அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட மருந்து முகாமைத்துவ கைநூல்

| | |
|---|---|
| (i) 5 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவு | மருந்துக் களஞ்சியங்களில் ஆகக்கூடியது 2 மாதங்களுக்குப் போதுமான பாதுகாப்பு இருப்பு பேணப்பட வேண்டிய போதிலும், வைத்தியசாலையின் தலைமைக் களஞ்சியம் மற்றும் மருந்தகங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் சில மருந்துகளில் மிகை இருப்பு நிலைமை இருப்பதும் சத்திர சிகிச்சைப் பொருட்களில் 7 வகைக்குரித்தாக எதிர்வரும் 06 மாதங்களுக்கும் கூடுதலாக மிகை இருப்பொன்று இருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ii) 9 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவு | மருந்துகளை களஞ்சியப்படுத்துவதற்குத் தேவையான சூழல் காரணிகள் போதியளவில் காணப்படாத இடங்களாக களஞ்சியங்கள் அமைந்திருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப் பட்டன. |
| (iii) 9 ஆம் அத்தியாயத்தின் 8.1 ஆம் பிரிவு | வைத்திய முகாமைத்துவ சபை அவ்வப்போது மருந்துக் களஞ்சியங்கள் தொடர்பாக பரிசோதனைகளை மேற்கொண்டு மருந்துகள் உரிய வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறான பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

### 2.4 போதியளவு அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2013 சனவரி 01 ஆம் திகதிய SFA/01/2012 ஆம் இலக்க சுகாதார அமைச்சின் நிதிக்கட்டுப்பாடு தொடர்பான அதிகாரக் கையளிப்பிற்குரிய சுற்றறிக்கையின் 28 ஆம் பிரிவிற்கு இணங்க கொடுப்பனவு அங்கீகாரம் அதிகார கையளிப்பொன்று இல்லாமல் அமைச்சின் பிரதி பணிப்பாளர் நாயகத்தின் மட்டத்தில் உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட வேண்டிய ரூபா 5 மில்லியனை மிகைத்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான வைத்தியசாலைச் சபையின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 18,942,939 தொகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 3,646,870 மிகையொன்றாகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 22,589,809 குறைவொன்றைக் காட்டியது. இதற்கு பிரதானமாக அரசின் மீண்டுவரும் மானியம் ரூபா 7,820,000 ஆல் குறைவடைந்தமையும், மருத்துவ உபகரணங்கள் நுகர்வுப் பொருட்கள் செலவினம் ரூபா 1,663,390 ஆல் அதிகரித்தமையும், மருந்துகள் செலவினம் ரூபா 5,826,625 ஆல் அதிகரித்தமையும், இயந்திர சேவைகள் கட்டண செலவினம் ரூபா 1,171,309 ஆல் அதிகரித்தமையும் தாக்கமளித்திருந்தன.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராக தொடங்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

சேவை நீடிப்பு வழங்கப்படாமை காரணமாக முன்னாள் கணக்காளர் ஒருவரால் சபைக்கு எதிராக வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் செயலாற்றல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

**எண்ணிக்கை**

| **சிகிச்சை பெற்ற நோயாளர்களின் எண்ணிக்கை** | **2013** | **2012** | **அதிகரிப்பு/ குறைவு** | **சதவீதம்** |
|---|---|---|---|---|
| வெளி நோயாளர் பிரிவு | 135,796 | 131,206 | 4,590 | 3 |
| அவசர சிகிச்சைப் பிரிவு | 18,518 | 19,017 | (499) | (3) |
| சிகிச்சை நிலையம் | 112,030 | 109,771 | 2,259 | 2 |
| தங்கியிருப்பவர்கள் | 15,969 | 14,079 | 1,890 | 13 |
| | 282,313 | 274,073 | | |
| **மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை** | | | | |
| கண் | 10,247 | 8,180 | 2,067 | 25 |
| லேசர் செய்தல் | 2,462 | 2,619 | (157) | (6) |
| சிறு கண் | 263 | 301 | (38) | (13) |
| சாதாரண | 131 | 150 | (19) | (13) |
| | 13,103 | 11,250 | | |
| **மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை** | | | | |
| ஆய்வுகூடம் | 34,082 | 40,231 | (6,149) | (15) |
| எக்ஸ்ரே கதிர் | 3,424 | 3,422 | 2 | - |
| ஈசீஜீ | 3,005 | 2,795 | 210 | 8 |
| | 40,511 | 46,448 | | |

**செலவினம்**

| உருப்படி | 2013 | 2012 | செலவினத்தின் அதிகரிப்பு/ குறைவு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| ஆய்வுகூடப் பொருட்கள் | 870,934 | 628,060 | 242,874 | 39 |
| நுகர்வு மற்றும் மருத்துவ உபகரணங்கள் | 2,357,404 | 694,014 | 1,663,390 | 240 |
| எக்ஸ்ரே பொருட்கள் | 193,042 | 172,855 | 20, 187 | 12 |
| மருந்துகள் | 31,282,074 | 25,455,449 | 5,826,825 | 23 |
| மொத்தச் செலவினம் | 173,252,725 | 150,786,238 | 22,466,487 | 15 |
| பெறுமானத்தேய்வு மற்றும் பணிக்கொடை | 22,453,384 | 20,410,472 | 2,042,912 | 10 |
| நோயாளர் நாளொன்றிற்கான செலவினம் (பெறுமானத்தேய்வு அடங்கலாக) | 2,310 | 2,058 | 252 | 12 |
| நோயாளர் நாளொன்றிற்கான செலவினம் (பெறுமானத்தேய்வு மற்றும் பணிக்கொடை நீங்கலாக) | 2,011 | 1,780 | 231 | 13 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கண் சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை 25 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், மேற்கொள்ளப்பட்ட சாதாரண கண் சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை 13 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

(ஆ) லேசர் செய்தல் எண்ணிக்கை 6 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன், சிறு கண் சத்திர சிகிச்சைகள் 13 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

(இ) ஆய்வுகூட பொருட் செலவினம் 39 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், ஆய்வுகூடப் பரிசோதனைகளின் எண்ணிக்கை 15 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

(ஈ) மருந்துச் செலவினம் 23 சதவீதத்தாலும் நுகர்வு மற்றும் மருத்துவ உபகரணங்கள் செலவினம் 240 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தன.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அவசர தேவைப்பாட்டின் அடிப்படையில் Fully Automated Hematology Analyzer இயந்திரமொன்று மட்டுப்படுத்தப்பட்ட கூறுவிலை கோரலின் கீழ் ரூபா 2,500,000 இற்கு கொள்வனவு செய்வதற்கு செயலாளரினால் அங்கீகாரம்

வழங்கப்பட்டிருந்ததுடன், 2012 திசெம்பரில் கட்டளையிடப்பட்டு 2013 யூலை மாதம் 23 ஆம் திகதி இயந்திரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், இயந்திரத்தை செயற்படுத்துவதற்குத் தேவையான இரசாயன ஊக்கிகள் (Reagents) 2013 ஆகஸ்ட் மாதத்தில் கட்டளையிடப்பட்டிருந்த போதும் 2013 திசெம்பர் மாதத்தில் வழங்கப்பட்டிருந்தன.

இந்த இயந்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற Full Blood Count with D Count என்ற பரிசோதனை ஒரு மணித்தியாளத்திற்கு ஆகக் குறைந்தளவு 60 பரிசோதனை அலகு இயலளவு காணப்பட்ட போதிலும் 2014 மே மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சாதாரண பரிசோதனைகளின் எண்ணிக்கை 255 அலகுகளாக இருந்தமையால் மிகை இயலளவினைக் கொண்ட இயந்திரமொன்றாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) வெவ்வேறு வகையான 22 பரிசோதனைகள் மேற்கொள்ளக்கூடிய மணித்தியாலம் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது 300 பரிசோதனைகளை மேற்கொள்ள முடியுமான இயந்திரமொன்று Fully Automated Biochemistry Analyzer ரூபா 8,736,000 இற்கு 2013 யூன் 13 ஆம் திகதி வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2014 முதல் 06 மாதங்களில் 6 பரிசோதனை வகைகளுக்குரிய 477 பரிசோதனை சந்தர்ப்பங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. வைத்தியசாலை ஆய்வுகூட நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டிருந்த போதிலும், தேவையான பயிற்சி பெற்ற பதவியணியினர் சேர்க்கப்பட்டிருக்கவில்லை இதற்கு செய்தித்தாள் விளம்பரத்தின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும், தகைமை வாய்ந்தவர்கள் இல்லை எனவும் இரண்டு பயிற்சி ஆய்வுகூட தொழிநுட்ப பகுப்பாய்வாளர்களை சேர்த்து பயிற்சிக்கு இணைக்கப்பட்டுள்ளதாக தலைவர் கணக்காய்விற்கு அறிக்கையிட்டிருந்தார்.

(இ) 2009 மார்ச் 27 ஆம் திகதிய 02/19/2009 ஆம் இலக்க சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையின் 4(i) பந்தியின் பிரகாரம் தாதி உத்தியோகத்தர் ஒருவர் வாரமொன்றிற்கு 36 மணித்தியாலங்களை மிகைத்து சேவை புரியும் மேலதிக சேவைக்காலத்திற்காக மேலதிக சேவைக்கான கொடுப்பனவு செலுத்தப்படல் வேண்டும். மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது 2013 சனவரி மாதத்தில் சேவை புரிந்த 28 தாதி உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய மேலதிக நேர மணித்தியாலத்தை விஞ்சி 626 மணித்தியாலங்களுக்கு ரூபா 43,422 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வைத்தியசாலையின் கண் சத்திரசிகிச்சை செய்த மருத்துவர் ஒருவால் 2009 ஆம் ஆண்டிலிருந்து கண் சத்திரசிகிச்சை மேற்கொள்வதை நிறுத்தியதன் காரணமாக 2000 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 765,000 பெறுமதியான Operating Microscope என்ற பெயரிலான மருத்துவ உபகரணம் 4 ஆண்டு காலமாக செயற்பாடற்று காணப்பட்டது.

(ஆ) 2007 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 258,635 பெறுமதியான Vitreus Scissors - Vertical என்ற உபகரணம் மற்றும் ரூபா 273,700 பெறுமதியான Vitreus Scissors - Horizontal என்ற உபகரணம் என்பன 2008 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்று காணப்பட்ட போதும், மீளாய்வாண்டின் போதும் அது தொடர்பாக பொருத்தமான நடைமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த இரண்டு உபகரணங்ளையும் 2014 ஆம் ஆண்டின் போது கைதவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக தலைவரால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டது.

### 4.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

வாகன தரிப்பிட நிர்மாண ஒப்பந்தத்திற்காக குறைந்த விலையை சமர்ப்பித்த வழங்குனரை ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை தெரிவிக்காமல் நிராகரித்து கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவிற்கு முரணாக முறையான ஒப்பந்தமொன்று, முற்பண பிணைப்பொறுப்பொன்று மற்றும் விரிவான கிரய மதிப்பீடொன்று இல்லாமல் புதிய விலைகோரலை கோரி இரண்டாவது குறைந்த விலையை சமர்ப்பித்த ஒப்பந்தகாரருக்கு இறுதி பட்டியல் உறுதிப்படுத்தப்படாமல் ரூபா 1,763,235 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.5 பதவியணி நிர்வாகம்

வைத்தியசாலையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 211 ஆக இருந்ததுடன், உள்ளவாறான பதவியணி 157 ஆக இருந்தமையால் பதவியணியில் 54 பற்றாக்குறையாக இருந்தன. அப்பற்றாக்குறை வைத்தியசாலைப் பணிப்பாளர் பதவியும் மருத்துவ பதவியணியில் 13 பேரும், தாதியர் பதவியணியில் 16 பேரும், ஏனைய வைத்தியசாலை உதவிச் சேவைகளில் 08 பேரும், அலுவலக உதவியாளர் பதவியணியில் 6 பேரும், தொழிலாளர் பதவியணியில் 10 பேருமாக இருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டுத் திட்டம்

2013 – 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய கூட்டுத்திட்டத்தின் பிரகாரம் நுண்ணுயிர் விஞ்ஞான ஆய்வுகூடமொன்று 2013 ஆம் ஆண்டின் போது அமைக்கப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 17 ஆம் திகதியின் போது அக்கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்த அளிப்பு மாத்திரம் மேற்கொள்ளப் பட்டிருந்தது.

அவ்வாறே கண் பிரிவை அபிவிருத்தி செய்வதற்காக 2013 ஆம் ஆண்டின் போது Non-Contact Biometry System, Occulocoherant Tomogrphy மற்றும் Other Pothalmic Micro Insruments போன்ற உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாட்டை நிறைவேற்றுவது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

வைத்தியசாலைக்காக புறம்பாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று இல்லாமல் இருந்ததுடன் சுகாதார அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மீளாய்வாண்டின் போது அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கணக்காய்வுக் குழு

2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டிற்காக குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு முறை கணக்காய்வுக் குழுக் கூட்டம் கூட்டப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக ஒரு கணக்காய்வுக் குழுக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான 06 வருமான மற்றும் செலவின விடயங்கள் தொடர்பில் 29 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான விலகல்கள் காணப்பட்டமையால் பாதீடு

பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது வைத்தியசாலை சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) மருந்துக் களஞ்சியங்கள் கட்டுப்பாடு

(ஆ) உணவு கட்டளையிடல்